உள்ளக மேற்பார்வையை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்களின் வகிபங்கு:(மட்டக்களப்பு மத்தி கல்வி வலய 1C பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டது)

# ROLE OF PRINCIPALS IN THE IMPLEMENTATION OF INTERNAL SUPERVISION:(WITH SPECIAL REFERENCE TO 1C SCHOOLS IN BATTICALOA CENTRAL EDUCATION ZONE)


எஸ். பாறூக்

**S. FAROOK**


பதிவு இலக்கம் : 513276381

கல்வி ஆண்டு : 2013 / 2014

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் கல்வி முதுமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான பகுதித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது.


OPEN UNIVERSITY OF SRI LANKA
LIBRARY

# ஆய்வுச் சுருக்கம்


இவ்வாய்வுக் கற்கையின் பிரதான நோக்கம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் 1C வகை பாடசாலைகளின் உள்ளக மேற்பார்வையில் அதிபர்களின் வகிபங்கினை ஆராய்வதாக இருக்கின்றது. இவ்வாய்வுக்குப் பொருத்தமான ஆய்வு வடிவமாக அளவை நிலை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் பத்து 1C வகை பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற 10 அதிபர்களும், 10 பிரதி அதிபர்களும், 10 பகுதித் தலைவர்களும் நோக்குடைய மாதிரி எடுப்பு முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்டதுடன் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்ற 341 ஆசிரியர்களில் 103 ஆசிரியர்கள் எழுமாற்று மாதிரி நுட்பத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வினாக்கொத்து, நேர்காணல் என்பன மூலம் பெறப்பட்ட தரவுகளில் பண்பு சார்ந்த தரவுகள் லிக்கட்டின் அளவுத்திட்டத்தின் மூலம் தொகை சார்ந்த தகவல்களாக மாற்றப்பட்டு வரைபுகள், சதவீத அட்டவணை, நியமச்சராசரி போன்ற தொகை சார்ந்த பகுப்பாய்வு நுட்பமுறையினூடாகவும், ஒத்த குறியிடல், முதன்மைப்பட்டியல் தயாரித்தல் போன்ற பண்பு சார்ந்த நுட்பமுறைகள் மூலமாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. மட்டக்களப்பு மத்தி கல்வி வலய 1C வகை பாடசாலைகளில் உள்ளக மேற்பார்வையில் 63 சதவீதமான அதிபர்கள் உள்ளக மேற்பார்வையின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைளைச் சரியாகப் பின்பற்றவில்லை என்பதுடன் 60 சதவீதமான அதிபர்கள் மாகாணக் கல்வித்திணைக்களம், வலயக்கல்வி அலுவலகங்களினால் அனுப்பப்படுகின்ற கடிதங்களுக்கு பதிலளிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் பாடசாலையின் உள்ளக மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறைவாக இருப்பதுடன் உள்ளக மேற்பார்வையில், ஆசிரியர்கள் சார்ந்த பிரச்சினைகளும் அதிகமாகக் காணப்படுகின்றன.



முதன்மைச் சொற்கள் : உள்ளக மேற்பார்வை, விளை திறன், வகிபங்கு, மேற்பார்வைச் செயற்பாடுகள்

# Abstract

This research is to be explored the role of the principals in the internal supervision of 1C type of schools in the Batticaloa Central Education Zone. The survey research design has been used as the appropriate research design of this study. 10 principals, 10 deputy principals, and 10 sectional heads of 10 1C type schools in the Batticaloa Central Education Zone were selected under the purposive Sampling techniques and 103 teachers out of 341 teachers who work in the Batticaloa Central Education Zone were selected under the random sample techniques. Qualitative data that derived from the questionnaire and interviews were converted in to quantitative data. Under the Likert scale and analyzed through quantitative analyzing techniques such as the graphs, percentage tables, and standard average and through the qualitative techniques such as similar coding and primary list preparation. 63 percent of principals in 1C School of Batticaloa Central Education Zone is reported not to follow the proper procedures of internal supervision and 60 percent of principals are reported to be engaged in replying the letters sent by Provincial Department of Education and Zonal Education office which reduces their time to be allocated in the internal supervision activities and which leads to more teacher's issues over the internal supervision.


Keywords: internal supervision, effectiveness, role, supervision activities